# ★ கைலஞ்சம் வழங்க முற்பட்ட வர்த்தகரை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 13 | இதழ்: 230
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 29-9-1991

## சபாநாயகர் துரத்தினர்!

(கொழும்பு)
தமது தரப்பிற்கு ஆதரவாக செயல்படுமாறுகோரி கொழும்பில் பிரபல வர்த்தகர் ஒருவர் சபாநாயகருக்கு பத்து லட்சம் ரூபா கொடுக்க முற்பட்டதாகவும் அதை அவர் மறுத்ததுடன் அவ் வர்த்தகரை எச்சரித்து துரத்தியுள்ளதாகவும்.

[4-ம் பக்கம் பார்க்க]

## மின்னல் தாக்குதல்
### மணலாற்றில் ஆரம்பம்

(கொழும்பு)
மணலாறு பகுதிகளில் இராணுவத்தினரின் 'மின்னல் தாக்குதல்' 2-ம் கட்ட நடவடிக்கை நேற்று ஆரம்பமானதாக கேர்ணல் முனசிங்க தெரிவித்துள்ளார்.
படையினருக்கு சாதகமான சூழ்நிலை காணப்படுவதைய

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில்
### நேற்று மோதலில்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் மோதல் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லையென இரா

(4-ம் பக்கம் பார்க்க

# ★ வடக்கு - கிழக்கில்
# யுத்த நிறுத்தம் வாபஸானது
# அரசின் முடிவில் திடீர் மாற்றம்

(கொழும்பு)
**வடக்கு-கிழக்கில் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த யுத்தநிறுத்தத்தை அரசு நேற்று திடீரென வாபஸ்பெற்றது. இதையடுத்து நேற்று நண்பகல்முதல் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி அறிவித்துள்ளார்.**

அரசின் இத்திடீர் முடிவு சகல தரப்பிலும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி தாக்குதல் நிறுத்த அறிவிப்பை நேற்று முன்தினம் இராணுவ அதிகாரி ஒருவர் சகல பத்திரிகைகளுக்கும், செய்தி ஸ்தாபனங்களுக்கும் விடுத்திருந்தார்.

இதையடுத்து வடபகுதியில் 3 மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்கு உடனடியாக நீக்கப்பட்டதுடன் நாட்டின் எப்பகுதியிலும் ஊரடங்கு அமுலில் இல்லை என அரசு அறிவித்தது-

மேலும் மோதல் சம்பவங்கள் எதுவும் வடக்கு-கிழக்கில் இடம்பெறவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இதே வேளை அரசின் இம்முடிவு இராணுவ தரப்பில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுடன் சில தமிழ்க் கட்சிகள் மத்தியிலும், எதிர்க்கட்சிகள் தரப்

[4-ம் பக்கம் பார்க்க]

## இனப் பிரச்னைக்கு தீர்வு
### பின் எங்கும் தேர்தலாம்!

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னையை தீர்த்து, செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களை சுயாதீனமாக இயங்க அனுமதித்தபின் நாடெங்கிலும் பொதுத் தேர்தலை நடாத்தும் திட்டம்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)
வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார்தீவுப்பகுதியைத் தவிர ஏனைய பகுதியில் நேற்று

[4ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவு பகுதியில்
### தாக்குதல் நிறுத்தம்

(கொழும்பு)
முல்லைத்தீவு பகுதியில் இடம் பெற்றுவந்த இராணுவ நடவடிக்கை கடந்த 26ம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில் முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்தின் நோக்கம் நிறைவேறியதை அடுத்தே இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. (சி)

## இராணுவ தரப்பில்
### பலத்த சேதம்

(லண்டன்)
முல்லைத்தீவு - மணலாறில் நடைபெற்றயுத்தத்தில் படையினருக்கு பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது.

இந்த யுத்தத்தில் இராணுவம் ஒப்புக்கொண்டதைவிட பலமடங்கு ஆட்சேதம் படையினர் தரப்பில் ஏற்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் ஞாபகார்த்த தடகள விளையாட்டுப்போட்டிகளின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணித் தலைவர் திரு. மாத்தயா பிரதம அதிதியாகக்

(4-ம் பக்கம் பார்க்க)

## எதிர்கால தாக்குதலுக்கு
### புதிய திட்டங்கள் தயாராகிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பகுதியில் எதிர்கால இராணுவ நடவடிக்கைகள்பற்றி தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றது. இவை பற்றிய விபரங்களை பாதுகாப்புகாரணங்களை முன்னிட்டு அறிவிக்கமுடியாது என இராணுவ தளபதி ஹமில்டன் வணசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பாக நேற்று அவர் பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்;

[4ம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தம்
### ஈரோஸ் கோரவில்லை

(கொழும்பு)
வடக்கு- கிழக்கில் நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு ஈரோஸ் கோரிக்கையென கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது. ஈரோஸ் அமைப்பை சேர்ந்த திரு எட்வேட் செபஸ்தியாம்பிள்ளையும், திரு. சி. வி. கே. சிவஞானமும் கடந்த வியாழக்

(4-ம் பக்கம் பார்க்க)

## 5 அதிகாரிகள்
## 74 இராணுவம் பலி

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 29 நாட்களாக நடந்த யுத்தத்தில், இராணுவதரப்பில் 5 உத்தியோகத்தர்களும் 74 படைவீரர்களும் கொல்லப்பட்டதாகவும் 19 உத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆயுதம்
### போலி ஆவணம் தயாரிப்பு

(கொழும்பு)
இலங்கை அரசு புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாக கூறும் போலி இராணுவ ஆவணங்களைத் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளுக்கு ஆயுதங்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வச்சிர பஞ்சர கவசம்

நவராத்திரி காலங்களில் பல கஷ்டங்கள் நீங்க பாட வேண்டிய பாடல் வச்சிர பஞ்சர கவசமாகும். இப்புத்தகத்தை தொல்புரம் வழக்கம்பரை மகாமாரி அம்பாள் தேவஸ்தான குருக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை ரூபா 5/- ஆகும். (சி-5415)


# குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

(வேலணை)

தீவுப் பகுதியில் நிலவிவருகின்ற குடிதண்ணீர் தட்டுப்பாட்டை போக்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான குழுவினர் செய்துவருகின்றனர். (75)

# வெற்றிலைக்கேணி அகதிகளுக்கு 650 குடிசைகள் அமைக்கப்படும்

(புலோலி)

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக்கிளை செம்பியன்பற்று மாமுனை ஆகிய இடங்களில் குடிசைகளை அமைத்து கொடுக்கவுள்ளது.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக 650 குடிசைகள் அமைக்கப்படும்; இராணுவ நடவடிக்கையினால் வடமராட்சி கிழக்கிலிருந்த ஆயிரத்து எண்ணூறு குடும்பங்கள்வரை இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (61)

# எழுதுவினைஞர் பதவிக்கு 2132 பேர் விண்ணப்பம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் கடந்த 27ந் திகதி வரை 2132 எழுதுவினைஞர் பதவிகளுக்கானவிண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நண்பகல் வரை நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரர்கள் நீண்ட வரிசையில் நின்று இவ் விண்ணப்பங்களைக் கையளிப்பதைக்காணமுடிந்தது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி இம்மாதம் 30ம் திகதியாகும்.

## தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை கெளிநோயாளர் பிரிவில் விசர்நாய்க் கடிக்குள்ளாகி முன்னர் தடுப்பூசி போட்டு இடையில் நிறுத்தியவர்களை தொடர்ந்து வந்து போட்டுக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (56)

# பிறப்பு அத்தாட்சிப் படிவங்கள் தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ், செயலக பதிவாளர் அலுவலகத்தில் 1954ம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களுக்கு வழங்கப்படும் இரு பக்கப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்படிவங்கள் வடபகுதிக்கு வரும் அடுத்த கப்பலில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 1954ம் ஆண்டிற்கு முன் பிறந்தவர்களுக்கு வழங்கப்படும் ஒரு பக்கப்படிவம் திருமண அத்தாட்சிப்பத்திரப் படிவம் இறப்பு படிவம் என்பன கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

# விஞ்ஞானப் பிரிவு மாணவரும் கலைப்பட்டப் படிப்பிற்கு பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பல்வேறு கல்வித் தகைமைகள் உடையோரும் பதிவுக்குத் தகுதியுடையோராவர்.

கலை, வர்த்தகம் ஆகிய இரு துறைகளிலும் பதிவுசெய்து கொள்ளலாம். பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானப் பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் கலைப் பட்டப் படிப்பிற்குப் பதிவு செய்யக்கூடிய நெகிழ்ச்சியை இப் பட்டப் படிப்பு கொண்டுள்ளது.

1990 ஆகஸ்டில் பரீட்சை செய்து பெறுபேறு பெற்ற மாணவர்கள் இவ்வாண்டு பதிவுசெய்துகொள்ள முடியாது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் திருட்டு

(உடுவில்)

உடுவில் அம்பலவாணர் வீதியில் ந.ஆருமைத்துரை என்பவரின் வீட்டில் இரவுநேரத்தில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. இது பற்றி விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [109]

## வருடாந்த உற்சவம்

(வேலணை)

வட இலங்கையின் கிறீஸ்தவர்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எளிமையான முறையில் சென்ற வாரம் கொண்டாடப்பட்டது. (73)

## வயோதிபர் விடுவிப்பு

(புலோலி)

வெற்றிலைக்கேணி படையினரின் முகாமில் கடந்த இரண்டு மாதங்களாக தடுத்துவைக்கப் பட்டிருந்த மா. சூசைப்பிள்ளை திருமதி சூ. மரியாப்பிள்ளை ஆகிய வயோதிபத் தம்பதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாகர் கோவிலில் உள்ள உறவினர்களிடம் வந்து சேர்ந்துள்ளார்கள். [61]

## படகு மீட்கப்பட்டது

(சென்னை)

வேதாரணியம் பகுதியில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்த மோட்டார் படகு ஒன்று இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இப்படகில் நாலுவரின் அடையாள அட்டைகளும் மீன்பிடி வலைகளும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மூன்றாண்டுகால கல்வி அபிவிருத்தித் திட்டம்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் மூன்றாண்டு கால கல்வி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1992, 93, 94-ம் ஆண்டுகளில் செயற்படுத்தக்கூடிய வாறான இத்திட்டம் பாடசாலை, கொத்தணி, கோட்டம் மாவட்ட நிலைகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் மட்டத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை தொகுத்து சீர்திருத்தல்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கமைய வேலைத்திட்டம் தயாரித்தல் அது சம்பந்தமான செயலமர்வுகளை நடத்தல் போன்றவற்றை மேற்கொள்ளுமாறு பாடசாலை, கொத்தணி, கோட்ட அதிகாரிகளுக்கு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அனுமதி வழங்கியுள்ளார்.

செயலமர்வுகளை பாடசாலை, கொத்தணிகள் ஒக்டோபர் 15 ற்குள்ளும், கோட்டம், மாவட்டம் ஒக்டோபர் 18 ற்குள்ளும் மேற்கொள்ள வேண்டும்.

## ஒருவர் பலி

(ஊர்காவற்றுறை)

மூளைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் சென்ற வாரம் காலமானார்.

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த திருமதி பத்மாலீலாவதி செல்லையாம் பிள்ளை (வயது 45) என்பவரே மூளைக்காய்ச்சலுக்கு பலியானவராவார். (59)

## பலர் பலி

(பீகிங்)

சீனாவின் தெற்கு மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவினால்சுமார் 300பேர் புதையுண்டுள்ளனர்.

பெரிய மழையை அடுத்து இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் பல மக்கள் உயிரிழக்க நேரிட்டது. பலநூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

## இராசி பலன்

29-09-1991

ஞாயிற்றுக்கிழமை

தமிழுக்குபுரட்டாதி 13

ஷஷ்டி மு. இ. 9-28 வரை, ரோகினி மு. இ. 8-34 வரை, சித்தயோகம், இராகுகாலம் மாலை 4-32 முதல் 6-02 வரை சுபநேரம் காலை 9-02 முதல் 10-32 வரை.

மேடம்: கடமை தவறுதல், பழிச்சொல் அவசர கோலம்,

இடபம்: வருமான உயர்வு, தொழில்மேன்மை, குடும்ப சுகம்.

மிதுனம்: பயணங்களால் அலைச்சல், விடாமுயற்சி, ஜயம்.

கடகம்: தொழில் உறவு, விஞ்ஞான அறிவு, காரிய சித்தி.

சிங்கம்: காரிய சித்தி வைராக்கியம், குடும்பசெலவு

கன்னி: மனக்குழப்பம், வசதிக்குறைவு, மனைவியால் துயர்.

துலாம்: எதிர்பாராத தொல்லை, உறக்கமின்மை, குடும்பபிரிவு.

விருச்சிகம்: அதிர்ஷ்ட வாய்ப்பு, தெய்வீக செலவு, தொழில்லாபம்.

தனுசு: புதியசிந்தனை, குதூகலம், புத்திரர் பெருமை.

மகரம்: கடும்சினம், பணமுடை, இனசனவிரோதம்.

கும்பம்: தனிமை நிலை, தொழில் தகராறு, அதிகாரிசினம்.

மீனம்: மகிழ்ச்சிப்போக்கு, தானதர்மம், நண்பர் உதவி.

ஜோஸ்யர்

# தொண்டர் ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களை மாகாண கல்வி அமைச்சு சேகரித்துவருகிறது.

சம்பந்தப்பட்ட பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் தொகை, ஆசிரியர்களின் எண்ணிக்கை, தேவைப்படும் ஆசிரியர் தொகை அல்லது மேலதிகமாக பணியாற்றுவோர் தொடர்பான விபரங்களைக் கோரும் சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [153]

## கள் விலை அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தென்னை பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், 9 ரூபா 50 சதமாக விற்பனை செய்துவந்த ஒரு போத்தல் பனங்கள்ளை 11-00 ரூபாவாக இம்மாதம் தொடக்கம் அதிகரித்துள்ளது

10 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட ஒரு போத்தல் தென்னங்கள்ளின் விலையும் 12-00 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு போத்தல் பனங்கள் 13-00 ரூபாவாகச் சங்கத் தவறணைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. [72]


## ஜாம் [JAM] போத்தல்கள் தேவை

ஜாம் போத்தல்கள் விலை ரூபா 5/-க்கு குறையாமல் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும்.

**Taste Line Industries (Pvt) Ltd**

இல. 14, சீனியர் ஒழுங்கை.

[தட்டாதெரு சந்தியிலிருந்து அரசடி வீதியால் நல்லூர் நோக்கிச் செல்லும்போது இடது பக்கம் வரும் முதல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.] (எ-1594)



## திருத்தம்

யாழ். பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

இருள் வளர்ப்பு - நூலாசிரியர் கலாநிதி சே. சித்திரவடிவேலு

மேலே குறிப்பிட்டவாறு கலாநிதி சே. சித்திரவடிவேலு எனத் திருத்திக்கொள்ளவும்.

தவறிற்காக மன்னிக்கவும்

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்

(எ-1608)

# வறிய மக்களின் நிலையை மேலும் நீடிக்கவிடக்கூடாது!

— மாத்தயா

(யாழ்ப்பாணம்)

''வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டியவர்கள் சென்றுவிட்டார்கள். இராணுவத்தின் கெடுபிடிகளையும், பொருளாதாரத் தடையையும், உற்பத்தித் தடைகளையும் அனுபவித்து, எமது போராட்டத்துடன் இணைந்து வாழும் வறிய மக்களின் நிலையை நாம் நீடிக்கவிடக் கூடாது''

இவ்வாறு, பொக்கணையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா கூறினார்.

பொக்கணையில் கப்டன் அக்காச்சி எழுச்சிக் கிராமத்தை திறந்துவைத்தபின்பு நடைபெற்ற கூட்டத்தில் திரு. மாத்தயா மேலும் பேசுகையில், ''தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பத்தில், தமிழீழத்தை வென்றெடுக்கவும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்கவுமே நாம் புறப்பட்டோம். ஆனால், அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் கல்வி அறிவின்றி, இருக்க வீடின்றி, தமது சொந்த உழைப்பை தாம் அனுபவிக்க முடியாமல் அல்லல்படுவதற்கு ஒரு தீர்வு காண்பதற்கும் நாம் தற்போது முனைந்துள்ளோம். இதுதான் எமது தலைவரின் ஆணையும் கூட.

உழைக்க ஆற்றல் இருந்தும், சொந்த நிலமில்லாமல் வறிய மக்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமையை நீடிக்க விடாமல், குடிநிலம் உள்ளவர்களும், மூலவளங்களை பயன்படுத்தாமல் வைத்திருப்பவர்களும் அவற்றை வறிய மக்களுக்கு இன்றைய சூழ்நிலையில் வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

போராட்ட காலத்தில் இக்கிராமத்து மக்களுடன் ஒன்றுக் கலந்து அவர்களுடன் கூடி உலாவிய கப்டன் அக்காச்சியின் பெயர் இக் குடியேற்றத்துக்கு சூட்டப்பட்டிருப்பதை பார்க்கும்போது, அவன் இறந்தபின்பும் இக் கிராமத்து மக்களுக்கு நல்லதையே செய்துள்ளான். இதேபோல், இன்று ஆயிரக்கணக்கான வீர வேங்கைகள் இந்த மண்ணின் விடிவிற்காக தமது உயிர்களை தியாகம்செய்து வருகின்றார்கள். வருங்காலத்தில் அந்த மாவீரர்களின் பெயரில் எழுச்சிக் கிராமங்கள், தொழில் நிறுவனங்கள் நினைவுச்சின்னங்கள் என்பன இந்த தமிழீழம் எங்கும் உருவாக்கப்படவேண்டும்'' என்றும் கூறினார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு புதிதாக அமைக்கப்பட்ட 'உமாநேசன் வீதி'யை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் திறந்துவைத்தார்.

இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் மங்கள விளக்கேற்றி வைத்தார். கப்டன் 'அக்காச்சி எழுச்சிக் கிராமம்' என்ற பெயர்பொறித்த கல்வெட்டை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயாவும், கப்டன் அக்காச்சியின் உருவப் படத்தை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. செந்தாளனும் திரை நீக்கம் செய்துவைத்தனர்.

இதன் பின்னர், இக்கிராமத்தில் நிறுவப்பட்ட சிறுவர் பாடசாலையை, திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரூபனும், சிறுவர் பூங்காவை, மக்கள் உறவு முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பராவும், சனசமூக நிலையத்தை யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர் திரு. ரவியும், முதலுதவி நிலையத்தை யாழ். மாவட்டப் பிரதி அரசியல் பொறுப்பாளர் திரு. எழிலரசனும், மக்கள் கடையை, நிழல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கண்ணனும், செயலகத்தைத் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் ப. மூர்த்தியும், ஆய்வு நிறுவன உற்பத்திப் பகுதியை யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வனும் திறந்துவைத்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், அக்கிராமத்தில் 4-5 வயதுக்குட்பட்ட சிறுவர்களினால் மேடையில் செய்து காண்பிக்கப்பட்ட உடற்பயிற்சிக் காட்சி, அனைவரின் பாராட்டுதலைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

---

20 லட்ச ரூபா நகைக்கொள்ளை:

# 7 விமானப்படை வீரர்கள் உட்பட 18 பேர் கைது

(கொழும்பு)

பலாகல பகுதியில் 20லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகளைக்கொள்ளையடித்தார்கள் என்றசந்தேகத்தின் பேரில் 7 விமானப் படை வீரர் உட்பட 18 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட படை வீரர்கள் இரவு நேரங்களில் மஹர, கடவத்தை, பேலிய கொட, கல்கிசை பகுதிகளின் பொதுமக்களின் வீடுகளில் புகுந்து பயங்கர ஆயுதங்களைக் காட்டி பணம், நகை, பெறுமதியான பொருள்களைக்கொள்ளையடித்து வந்துள்ளார்களென கூறப்படுகிறது. (வி)

---

# முதலுதவிப்பயிற்சி சான்றிதழ் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரால் வடபிராந்திய போக்குவரத்துச் சபை யாழ். ஊழியர்கள் முப்பது பேருக்கு முதலுதவிப் பயிற்சி மூன்று மாதகாலமாக அளிக்கப்பட்டு சான்றிதழ் பத்திரம் வழங்கப்பட்டது.

சென்ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவு வடமாகாண ஆணையாளர் திரு. சுதந்தன் இன்னாசித்தம்பியினால் இச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் சாரணிய பொறுப்பாளர் நாகேந்திரம் மோகன சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (56)

---

# பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது

(புதுடில்லி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 13 நாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டு அடுத்த மாதம் 13ம் திகதி இந்தியா வருகின்றது. பாகிஸ்தான் அணி இந்திய அணியுடன் 5, ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும். (வி)

---

கெயர் / யு. எஸ். எயிட் நிறுவனம்

# உணவுற்பத்தி அதிகரிப்புக்கு 15,000விவசாயிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் யாழ். மாவட்டத்திலுள்ள 15,000 விவசாயிகளுக்கு கெயர் நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்கவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக இந்த உதவிப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், உலர்வலய அபிவிருத்தி நிறுவனம், மக்கள் நலன் காக்கும் பிரிவு, ஊற்று நிறுவனம், அறவழிப் போராட்டக் குழு, மாவட்டக் கூட்டுறவுச் சபை போன்ற அமைப்புகள் ஊடாக இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி பருப்பு வகை, எள்ளு, மரக்கறி, குரக்கன் மிளகாய், மரவள்ளி, நெல்போன்றஉணவுப்பொருள்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படும்.

மண்வெட்டி, மண்ணெண்ணை, விதைகள், நீரிறைக்கும் இயந்திரம் போன்றவை உட்பட பல உதவிகள் இத்திட்டத்தில் இணைக்கப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக கெயர் யு.எஸ். எயிட் 28,000,000/- ரூபாவினை செலவுசெய்யவுள்ளது.

---

# வறுமை நிவாரண முத்திரைக்கு பொருள்கள்

(காங்கேசன்துறை)

உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்ட பகுதிகளில் வறுமை நிவாரண உணவு முத்திரைகளுக்கு பொருட்கள் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலி. தெற்குப் பகுதியில் தொழிலிழந்தவர்களுக்குவழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதை அடுத்து சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் உணவு முத்திரைக்குப் பொருட்களை வழங்க ஆரம்பித்துள்ளது.

உணவு முத்திரைத் தொடரில் 9 வது புள்ளிக்குப்பொருட்கள் வழங்கப்படவேண்டியிருந்தும் அதை விடுத்து 10-வது புள்ளிக்குப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

30-ம் திகதிக்குள் 10-ஆம் புள்ளிக்குபொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (86)

---

யாழ். மாவட்டத்தில்

# 144,456 குடும்பங்கள் தொழில் ரீதியாக பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். மாவட்டத்தில் மட்டும் 144, 456 குடும்பங்கள் தொழில் இழந்துள்ளதாக அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி புள்ளிவிபரத்தின் படி, யாழ். மாவட்டத்தில் 49,205 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், இவர்களில் 18,000 குடும்பங்கள் 209 முகாம்களில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (வி)

---

# ஈழத்தமிழரை விசாரிக்க தமிழக அரசு முடிவு

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை ஒடுக்குவதற்காக கரையோரப் பகுதியில் இலங்கைத் தமிழர் அவர் அகதியோ, போராளியோ அன்றி கடத்தல்காரராகவோ இருந்தால் அவர்களை விசாரிப்பதென்று தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

போராளிகளிடமிருந்து அகதிகளைப் பிரிக்கும் நடவடிக்கையில் ஒரு முயற்சியாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அரச வட்டாரங்கள் பி. ரீ. ஐ செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தன.

---

பாஷையூர்

# சென். அன்ரனிஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சமாசம் சனசமூக நிலையங்களிடையே நடாத்திய எழுபேர்கொண்ட நொக்கவுட் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கோஷ்டி சாம்பியனாகத்தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி கோஷ்டிக்கும் தொடர்மாடிக் கோஷ்டிக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில், சென். அன்ரனிஸ் கோஷ்டி 1-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் தொடர்மாடிக்கோஷ்டியினரின் ஆட்டம் சிறப்பாக இருந்தபோதிலும், கோல்கள் போடும் பல சட்டங்களை நழுவவிட்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு திரு. எஸ். எம். பிலேந்திரன்மத்தியஸ்தம் வகித்தார். (வி)

---

# மொசாட் ஆணைக்குழு விசாரணை அறிக்கை

(கொழும்பு)

மொசாட் ஆணைக்குழு விசாரணை தொடர்பான அறிக்கையைத் தயாரிக்கும் வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன.

இம்மாதஇறுதியில் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதியரசர் எல். டபிள்யூ. பி. வடகொடபிட்டிய தலைமையில் இந்த விசாரணைகள் கொழும்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. [153]

---

8 ரூபாவிற்கு மேல்

# பாண் விற்பனை செய்தால் விநியோகம் நிறுத்தப்படும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் தனது பேக்கரியில் தயாரிக்கப்பட்ட பாணை ஒரு றாத்தல் எட்டு ரூபாவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் விற்பனை செய்து வருகின்றது.

இதுவரை காலமும் ஒரு இறாத்தல் பாண் இங்கு 11 ரூபாவாக விற்கப்பட்டது.

இதேவேளை தனிப்பட்ட வியாபாரிகள் இவர் சங்கத்தில் கொள்வனவு செய்யப்படும் பாணை அதிகரித்த விலைக்கு விற்பதாக தமக்கு புகார்கள் வந்துள்ளதாகவும் எட்டு ரூபாவுக்கு மேல் பாணை விற்கும் வியாபாரிகள் பற்றி பொதுமக்கள் தகவல் தரும் பட்சத்தில் அவர்களுக்கான பாண் விநியோகம் நிறுத்தப்படும் என்று சங்க பொது முகாமையாளர் திரு. வைரவநாதன் தெரிவித்தார். (72)

# அரசின் கட்டுக்கோப்பில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

## ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளாலும், பொருளாதாரத் தடைகளாலும் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், அரசின் கட்டுக்கோப்பில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்.

இவ்வாறு தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் "மகஜர்ஒன்றை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ளது: அந்த மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் ஜனாதிபதி என்ற வகையில் தாங்கள் செயல்படவில்லை என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இவ் விடயத்தில் தங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டதுடன் மேலும் பல குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் 4-ம் ஆண்டு பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இம்மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதென ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

# தமிழக கரையோரங்களில் ஈழத்தமிழர் நடமாட தடை

(சென்னை)

தமிழக கரையோரப் பகுதிகளில் ஈழத்தமிழர்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஈழ அகதிகள் உட்பட இலங்கைத் தமிழர்கள் யாராவது காணப்பட்டால் அவர்கள் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள்.

இதேவேளை இப்பகுதியில் மீனவர்கள் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## சுயேட்சை எம். பி. க்கள் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் புதிய எம். பி. க்களாக நியமிக்கப்பட்ட சுயேட்சைக் குழுவினர் (ஈரோஸ்) ஆறு உறுப்பினர்களும் அடுத்த மாதம் 8-ஆம் திகதி நாடாளுமன்றில் சத்தியப்பிரமாணம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்டுகிறது. (153)

## ஊரடங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் 12 மணிமுதல் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதென பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

நேற்று முன்தினம் தளர்த்தப்பட்ட இந்த ஊரடங்குச் சட்டம் மீண்டும் திடீரென நேற்று நண்பகல் இப்பகுதியில் அமுல் செய்யப்பட்டது. (சி)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு விநியோகித்ததாக ஐ. தே. க. எதிரணியினர் குற்றம் சாட்டியதையடுத்தே இப்போலி இராணுவ ஆவண தயாரிப்பு முயற்சிநடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. (சி)

## 5 அதிகாரிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தர்களும் 278 படையினரும் காயமடைந்ததாகவும் கேர்ணல் டி.ஸில்வா தெரிவித்துள்ளார் (மா)

## யுத்தநிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை ஜனாதிபதியை சந்தித்து தங்கள் பதவிஏற்பு தொடர்பாகவும், எம். பி. பதவியேற்றபின் தங்கள் பாதுகாப்பு தொடர்பாகவுமே பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பாராளுமன்ற சபாநாயகருடன் தொடர்புகொள்ளுமாறு ஜனாதிபதி இவர்களைக் கேட்டுள்ளார்

யுத்த நிறுத்தம்பற்றி அவர்கள் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் எதனையும் நடாத்தவில்லையென்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. (சி)

## சவர்க்காரம், மண்ணெண்ணை பங்கீட்டுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, மருதனார்மடம் ப. நோ. கூ. சங்கங்கள் கட்டுப்பாட்டு விலையில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெயையும் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, பருத்தித்துறை, ஆகிய ப. நோ. கூ. சங்கங்கள் கட்டுப்பாட்டு விலையில் ஒரு சவர்க்காரத்தையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

இதேநேரத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அகதிகள் முகாம்கள் அனைத்திலுமுள்ள மக்களுக்கு மண்ணெண்ணெயும், சவர்க்காரமும் வழங்கப்பட்டுவருவதாக, யாழ். செயலகம் தெரிவித்துள்ளது. (வி)

## கைலஞ்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வர்த்தகர் எந்தத் தரப்பிற்காக சமாதான எல்லை கடந்த 23-ம் திகதி சந்தித்தார் என்பதுபற்றி தெரியவரவில்லை.

இவ்வாறான தரகுச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறலாமென அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி-153)

## வடக்கு-கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பீதியும் கலக்கத்தை ஏற்படுத்தியது.

வடக்கு - கிழக்கில் படையினர் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து அவர்கள் வெளியேற மாட்டார்கள், என்றும் இராணுவ தரப்பில் தெரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நண்பகல் முதல் தாக்குதல் நிறுத்த செய்தியை வெளிநாட்டு வானொலிகள் முக்கியத்துவம் கொடுத்து அறிவித்துவந்தன. எனினும் இச்செய்திகள் வெளிவந்து 24 மணி நேரத்தின் பின்பே மேற்படி அறிவிப்பை அரசும், இராணுவமும் மறுத்தன.

முதலில் தாக்குதல் நிறுத்த அறிவிப்பை அரசும், இராணுவமும் வெளியிட்டபோதும் பின் ஏன் இதனை இருதரப்பும் மறுத்தன என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது அவதானிகள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஜ)

## மின்னல் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுத்தே இந்த நடவடிக்கை ஆரம்பமானதாக அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் தாக்குதலில் ஈடுபட்டுள்ள படையினர் தற்போது மணலாறுப்பகுதிக்கு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## ஜனாதிபதி முறைக்கு ஆதரவாம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை பாதுகாப்போம் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் சுயேட்சை குழுவினர் ஈரோஸ் உறுதியளித்ததாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (153)

# முல்லை. காடுகளில் விமானத்தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் விமான பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாக்குதல் நிறுத்தமென அறிவித்தபடையினர் மீண்டும் தாக்குதல் ஆரம்பித்துள்ளதாக முன்னுக்குப்பின் முரணான செய்திகளை வெளியிடுவதாக நேற்று பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## எதிர்கால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது அல்லது வாபஸ் பெறப்பட்டுள்ளதாக பத்திரிகைகளும், செய்தி ஸ்தாபனங்களும் தெரிவித்திருந்தன இதில் எதுவித உண்மையும் இல்லை. புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை சகல பகுதிகளிலும்தொடர்ந்துமேற்கொள்ளப்படுகிறது.

முல்லைத்தீவு - வெலிஓயாப் பகுதியில் ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி ஆரம்பமான மின்னல் தாக்குதல் கடந்த வியாழக்கிழமை பூர்த்தியாயின. அவர்களது இலக்கு பூர்த்தியானதையடுத்து படையினர் வெலிஓயாவிற்குத் திரும்பியுள்ளனர். (சி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்டெம்பர் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10336/81

# ஈபி. ஆர்.எல்.எவ்.கருத்திற்கு முன்னாள் அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

தமிழ் தேசிய இராணுவம் ஈ. பி. ஆர். எல். எவ். தலைமையில் இயங்கவில்லையென அந்த இயக்கம் மறுத்துள்ளதை வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் கண்டித்துள்ளதுடன் மேற்படி அமைப்பின் தலைமையிலே இயங்கியதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை அமைச்சரவையிலிருந்து பதவி விலகிய திரு. தயான் ஜெயதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய இராணுவத்தின் அட்டூழியத்தை அடுத்தே தாம் அமைச்சர் பதவி விலகியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய இராணுவமே இப் படையை அமைத்ததெனவும் ஈ. பி. ஆர். எல். எவ் வின் தலைமையில் இப்படை இயங்கவில்லையென முன்னாள் மாகாண சபை அமைச்சர் ஒருவர் கூறியதற்கு பதிலளித்தே திரு. தயான் ஜெயதிலக இதனைத் தெரிவித்துள்ளார்; (சி)

# 1992 பெப்ரவரியில் உலகக் கிண்ண கிரிக்கெட்

(சிட்னி)

1992-ம் ஆண்டு பெப்ரவரி மார்ச் மாதங்களில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் நடைபெறவுள்ளன.

கடந்த 30 வருடங்களின் பின் இம்முறை தென்னாபிரிக்க அணியும் பங்குபற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வுபெற்ற மே.இந்திய அணித் தலைவர் விவியன் ரிச்சர்ட் உலககிண்ண போட்டியில் பங்கு பற்றவுள்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"கடந்த ஒரு வருடத்துக்கு மேற்பட்ட யுத்த காலத்தில் மக்கள் உள்ளூர் உற்பத்தியினால் தாக்குப்பிடித்துள்ளார்கள். இப்படிப்பட்ட உள்ளூர் உற்பத்திக்குக் கிடைக்கவேண்டிய சந்தைவாய்ப்பு தொடர்ந்தும் பேணப்படவேண்டும்."

இவ்வாறு தமிழர் நலன்காக்கும் ஒன்றியம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைவரிடம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது. (வி)

## இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று அரசிடமிருப்பதாகத் தெரியவருகிறது

இதற்கிடையில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஒரு வாக்கினாலாவது தமது தரப்பு வெல்லுமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன:

தொடர்ந்தும் ஜனாதிபதிக்கு தாங்கள் பல தொல்லைகளை கொடுத்துவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (சி-153)

## இராணுவ தரப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், குடிநீர் கிடைக்காமல் இராணுவம் அவதிப்பட்டதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதுவே இப்பகுதியிலிருந்து படையினர் பின்வாங்கக் காரணமாயிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. (சி)

## இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு வெற்றிவீரர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (வி)

## வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக முல்லைத்தீவு-மணலாறு பகுதியில் மோதல் எதுவும் நேற்று நடைபெறவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்குப் பகுதியில் மோதல் சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (இ)

## சர்வதேச ஆசிரியர் தினம்

(கொழும்பு)

சர்வதேச ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6ம் திகதியிலிருந்து பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய தரத் திட்டம் ஒன்றை அமுல்செய்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# ஜப்பானிய சக்கரவர்த்திக்கு 26,000 பொலிசார் பாதுகாப்பு

(டோக்கியோ)

ஆசிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கும் ஜப்பானிய சக்கரவர்த்திக்கு 26 ஆயிரம் ஜப்பானிய பொலிஸார் பாதுகாப்பளிக்கவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாத இறுதியில் 11நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பானிய சக்கரவர்த்தி அக்கிஹிட்டோ மலேசியா, தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்குச்செல்ல இருப்பதாகவும் இவருக்கு பாதுகாப்பு வழங்கும் முகமாக 26ஆயிரம் ஜப்பானியப் பொலிஸார் முன்கூட்டியே மேற்படி நாடுகளுக்குச் செல்லவிருப்பதாகவும், அடுத்த மாதம் 6-ஆம் திகதி சக்கரவர்த்தி நாடு திரும்பும் வரை இந்த பொலிஸார் ஆங்காங்கே பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படுவார்களென்றும் கூறப்படுகின்றது. (ஸ்)